# தமிழினி தமிழ் உரைகள்

## 9ஆம் வகுப்பு - காலாண்டு தேர்வு - மாதிரி வினாதாள் -1

பாடம்: தமிழ் மொத்த மதிப்பெண்: 100

**பகுதி-1 (மதிப்பெண்கள்: 15)**

**அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 15 x 1 = 15**

**1. தமிழ்விடு தூது ______ என்னும் இலக்கிய வகையைச் சார்ந்தது.**

அ. புதுக்கவிதை ஆ. தொடர்நிலைச் செய்யுள் இ. சிற்றிலக்கியம் ஈ. தனிப்பாடல்

**2. மல்லல் மூதூர் வயவேந்தே ___ கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?**

அ. மறுமை ஆ. பூவரசு மரம் இ. வளம் ஈ. பெரிய

**3. குளிர்ந்த மலர்களை உடைய மரம் ______**

அ. வஞ்சி ஆ. காஞ்சி இ. குரா ஈ. நாகம்

**4. இந்திரவிழா ______ நகரில் நடைபெறுவதாக கூறப்படுகிறது.**

அ. புகார் ஆ. மதுரை இ. திருச்சி ஈ. கொற்கை

**5. ஐம்பெருங்குழு, எண்பேராயம் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம் ______**

அ. திசைச்சொற்கள் ஆ. வடசொற்கள் இ. தொகைச்சொற்கள் ஈ. உரிச்சொற்கள்

**6. தும்பி என்பது ______ அறிவு உடைய உயிரினம்.**

அ. ஓரறிவு ஆ. ஈரறிவு இ. மூவறிவு ஈ. நான்கறிவு

**7. _____ என்ற எண்ணுப்பெயரில் வல்லினம் மிகும்.**

அ. இரண்டு ஆ. நான்கு இ. ஆறு ஈ. எட்டு

**8. நீர் நிலைகளோடு தொடர்பில்லாதது எது?**

அ. அகழி ஆ. ஆறு இ. இலஞ்சி ஈ. புலரி

**9. "ஓர் எந்திர வூர்திஇ யற்றுமின்"... என்ற பாடல் வரி இடம் பெற்ற நூல் ______**

அ. புறநானூறு ஆ.சிலப்பதிகாரம் இ. மணிமேகலை ஈ. சீவக சிந்தாமணி

**10. தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?**

அ. தேசியத் திறனறித் தேர்வு ஆ. ஊரகத் திறனறித் தேர்வு
இ. தேசிய திறனறி, கல்வி உதவித்தொகை தேர்வு ஈ. மூன்றும் சரி

**11. Epigraphy என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல் ______**

அ. அகழாய்வு ஆ கல்வெட்டியல் இ. நடுகல் ஈ. சிற்பங்கள்

**பாடலை படித்து பின்வரும் வினாக்களுக்கு (12. 13. 14. 15) விடைதருக.**

*"நாளிகே ரஞ்சே ருந்தி நறுமலர் நரந்தம் எங்கும்*
*கோளிசா லந்த மாலம் குளிர்மலர்க் குரவம் எங்கும்*
*தாளிரும் போந்து சந்து தண்மலர் நாகம் எங்கும்*
*நீளிலை வஞ்சி காஞ்சி நிறைமலர்க் கோங்கம் எங்கும்."*

**12. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் ______**

அ. மணிமேகலை ஆ. பெரியபுராணம் இ. புறநானூறு ஈ. உயிர்வகை

**13. இப்பாடலின் ஆசிரியர் ______**

அ. தொல்காப்பியர் ஆ. சீத்தலைச் சாத்தனார் இ. குடபுலவியனார் ஈ. சேக்கிழார்

**14. நாளிகேரம் - என்பதன் பொருள்**

அ. நாரத்தை ஆ. நாகமரம் இ. தென்னை ஈ. அரசமரம்

**15. இப்பாடலில் அமைந்துள்ள அடி எதுகை ______**

அ. வஞ்சி, காஞ்சி ஆ. தாளிரும், நீளிலை இ. நறுமலர், நரந்தம் ஈ. நரந்தம், குரவம்

**பகுதி -II (மதிப்பெண்கள்: 18)**

**பிரிவு-1**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 4 x 2 = 8**
**(வினா எண் 21-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்)**

**16. விடைக்கேற்ற வினா அமைக்க.**

அ. இந்தியாவில் 1300-க்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்படுகிறது.

ஆ. வினைச்சொற்களை அதன் அமைப்பின் அடிப்படையில் தனிவினை, கூட்டு வினை என இருவகைப்படுத்தலாம்.



Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

**17. கல்லணையைக் கட்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்பம் குறித்து எழுதுக?**
**18. உங்களது பள்ளியைச் சுற்றியுள்ள நீர்நிலைகளின் பெயர்களைக் குறிப்பிடுக?**
**19. திறனட்டைக் கருவி ___ குறிப்பு வரைக.**
**20. கனவிலும் இனிக்காதது எவர் நட்பு?**
**21. "ஓஒதல் '.. எனத்தொடங்கும் குறளை எழுதுக.**

## பிரிவு-2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 5 x 2 = 10**

**22. தொடர்களை மாற்றி உருவாக்குக.**

அ. இளஞ்செழியன் விளையாட்டுத் திடலில் நன்றாக ஓடினான். (பிறவினை தொடராக மாற்றுக)

ஆ. உண்ணப்படும் தமிழ்த்தேனே ___ (செய்வினைத் தொடராக மாற்றுக)

**23. பகுபத உறுப்பிலக்கணம் காண்க:** வளர்ந்த

**24. பொருள் எழுதிக் தொடரமைக்க.**

அ. குளவி, குழவி ஆ. சிறு, சீறு

**25. கலைச்சொல் தருக.**

அ. Video Conference ஆ. Tropical zone

**26. பிழைநீக்கி எழுதுக.**

அ. ராணி தன்னுடைய பணியை விட்டு விலகினான்.

ஆ. சூறாவளியின் போது மேல்மாடியில் தங்காமல் தரைத்தளத்திலேயே தங்கியதால் தப்பிப்பான்.

**27. தொடர் தரும் பொருளைக் கூறுக.**

அ. பொய்ச்சொல், பொய்சொல்

**28. அகராதியில் காண்க (பொருள் தருக)**

அ. துவனம் ஆ. புரிசை

## பகுதி - III (மதிப்பெண்கள்: 18)

## பிரிவு-1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 2 x 3 = 6**

29. திராவிட மொழிகளின் பிரிவுகள் யாவை? அவற்றுள் உங்களுக்குத் தெரிந்த மொழிகளின் சிறப்பியல்புகளை விளக்குக.
30. நீரின்று அமையாது உலகு. நீரின்று அமையாது யாக்கை இவ்விரண்டு தொடர்களையும் ஒப்பிட்டு எழுதுக?
31. பள்ளி மாணவர்களுக்கான தமிழக அரசின் இணையவழிச் சேவைகளை எழுதுக?

## பிரிவு-2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 2 x 3 = 6**
**(வினா எண் 34-க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)**

32. காலந்தோறும் தமிழ்மொழி தன்னை எவ்வாறு புதுப்பித்துக் கொள்கிறது?
33. "தீவினை அச்சம்" என்ற அதிகாரத்தில் வள்ளுவர் கூறியுள்ள கருத்தை எடுத்துக்காட்டுடன் எழுதுக?
34. அ. காடெல்லாம் .... எனத் தொடங்கும் பெரியபுராணம் பாடலை எழுதுக. (அல்லது)
ஆ. ஒன்றறி வதுவே.... என்ற உயிர்வகை பாடலை எழுதுக.

## பிரிவு-3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2 x 3 = 6**

35. வல்லினம் மிகும் இடங்களில் எவையேனும் மூன்றனுக்கு எடுத்துக்காட்டுடன் விவரித்து எழுதுக.
36. வை, விடு, போ - போன்ற வினையடியின் முதல்வினை, துணைவினைகளை எழுதுக?
37. உவமை அணியை எடுத்துக்காட்டுடன் விவரி?

## பகுதி - IV (மதிப்பெண்கள்: 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 5 x 5 = 25**

38. அ. தூது அனுப்பத் தமிழே சிறந்தது ___ தமிழ்விடு தூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக?
(அல்லது)
ஆ. பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக?

39. அ. உங்களின் நண்பர், பிறந்த நாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ். இராமகிருஷ்ணனின் "கால்முளைத்த கதைகள்" என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக?



Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

(அல்லது)

ஆ. உங்கள் தெருவிலுள்ள பழுதுபட்ட மின்விளக்குகளை சரிசெய்து தரும்படி மின்வாரிய அலுவலருக்கு விண்ணப்பம் ஒன்று எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



**41. பொன்மொழிகளை மொழிபெயர்க்க.**

அ. A nation's culture resides in the hearts and in the soul of its people – Mahatma Gandhi

ஆ. The art of people is a true mirror to their minds – Jawaharlal Nehru

இ. The biggest problem is the lack of love and charity – Mother Teresa

ஈ. You have to dream before your dreams can come true – A.P.J. Abdul Kalam

42. பள்ளியிலும் வீட்டிலும் நீ எவ்வாறு பொறுப்புடன் நடந்து கொள்வாய் என்பதை ஒப்பிட்டு எழுதுக?

**பகுதி - V (மதிப்பெண்கள்: 24)**

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும். 3 x 8 = 24**

**43. அ. பயன்பாட்டில் எவ்வாறெல்லாம் தமிழ்மொழியின் வேர்ச் சொற்கள், வடிவ மாற்றம் பெறுகின்றன என்பது குறித்து எழுதுக.**

(அல்லது)

**ஆ. ஏறுதழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரி?**

**44. அ. "தண்ணீர்" கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கி எழுதுக?**

(அல்லது)

**ஆ, இந்திய விண்வெளித் துறை பற்றிய செய்திகளை விவரிக்க?**

**45. அ. பள்ளியில் நடைபெற்ற இலக்கியமன்ற விழா நிகழ்ச்சிகளைத் திரட்டி தொகுப்புரை ஒன்றை உருவாக்குக.**

(அல்லது)

**ஆ. "நீரின்று அமையாது உலகு" என்ற தலைப்பில் கட்டுரை வரைக.**

**வெற்றி உன்னிடம்! - ஏ பி ஜே அப்துல் கலாம்**



Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593